**புத்தளம் மாவட்டத்தின் 18 கமநலசேவை குழுக்கள் - 2024**

---

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

**1.1** புத்தளம் மாவட்டத்தின் 18 கமநலசேவை குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2024 ஆண்டு தொடர்பான புத்தளம் மாவட்டத்தின் 18 கமநலசேவை குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது. முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் வெளியிடப்படுவதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்கள்**

**1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 கமநலசேவை குழுகளின் 9.1586 ஹெக்டயர் பரப்பளவான மேட்டு நிலக் காணி, 18 மண் பரிசோதனைக் கருவிகள், 07 பழைய மற்றும் புதிய களஞ்சியங்கள், 04 அலுவலகக் கட்டிடங்கள், ஒரு அரசாங்க வீடு, ஒரு விதைத் களஞ்சியம், ஒரு காவலறை, ஒரு மலசல கூடத் தொகுதி மற்றும் ஒரு திசு வளர்ப்புப் பண்ணை என இருந்த நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதிகள் பெறுமதீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 கமநலச் சேவை நிலையங்களின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகள் பெறுமதீடு செய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய நிலையங்களின் காணிகள் மற்றும் கட்டிடங்கள் அனைத்தும் எதிர்காலத்தில் பெறுமதீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | நிதியல்லாத சொத்துக்களின் மதிப்பைச் சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | இரு கமநலசேவை குழுகளில் ஏலத்தில் விற்கப்பட்ட மற்றும் ஏனைய நிறுவனங்களுக்குப் பறிமாற்றம் செய்யப்பட்ட ரூபா 762,618 பெறுமதிள்ள இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்கப்படவில்லை. | இந்த இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் மதிப்பை நீக்குவதற்காக அனுமதி பெற்றுக் கொள்வதற்குப் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | சரியான விதத்தில் கணக்குகளில் சரிசெய்து உரிய நிலுவைகளை நீக்கிச் சரியான நிலுவைகளை நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |
| (இ) | 11 கமநல சேவை நிலையங்களுக்குரிய உழவு இயந்திரங்கள், அறுவடை செய்யும் இயந்திரங்கள், கமநல உபகரணங்கள் மற்றும் களையெடுக்கும் இயந்திரங்கள் | உழவு இயந்திரங்கள் மற்றும் கமநல உபகரணங்களின் நிலுவைகளை திரட்டிய நிதியத்துடன் சரிசெய்வதற்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்காக | முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு சொத்துக்கள் இல்லாதமைக்கான காரணங்களை |

| | | | |
|---|---|---|---|
| | ஆகியவற்றுக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 9,913,774 நடைமுறையல்லாத பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருந்தபோதிலும், அதற்குரிய சொத்துக்கள் நிறுவனங்களிடம் இருக்கவில்லை. | பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | வெளிப்படுத்துவதுடன் அதற்கமைய நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான விதத்தில் திருத்தங்களைச் செய்தல் வேண்டும். |
| (ஈ) | 03 கமநலசேவை குழுகளில் காலநிலை சாமர்த்திய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 2022 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்ற 04 விதை நடுகை இயந்திரங்கள், 10 நெற் பயிர் நடுகை இயந்திரங்கள், 16 நீரளவு மானிகள், ஒரு விதை விதைக்கும் இயந்திரம், 06 களை பறிக்கும் இயந்திரங்கள், ஒரு யானை வேலி உபகரணத் தொகுதி, ஒரு மல்டி மீடியா புரொஜெக்டர், ஒரு ஸ்மார்ட் தொலைக்காட்சி இயந்திரம், 03 வீடர் இயந்திரங்கள், 01 திரிபாட் ஸ்கிரீன் (Tripod screed) மற்றும் ஒரு மடிக்கணினி என இருந்த 45 நிதியல்லாத சொத்துக்களின் உருப்படிகளின் பெறுமதிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்வதற்காக பெறுமதிகளை வழங்குமாறு காலநிலை சாமர்த்திய நீர்ப்பாசனத் திட்டத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியை சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | 04 கமநலசேவை குழுக்களில் மீளாய்வாண்டுக்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 326,847 மேலதிகமாகவும், 02 சபைகளில் ரூபா 31,881 குறைவாகவும், மஹகும்புக்கடவள சபை மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள திரண்ட வட்டி ரூபா 11,200 குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 02 சபைகளினால் அட்டுறு வட்டி ரூபா 207,892 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பேரேட்டுப் பதிவுகள் மூலம் 2025 கணக்கு அறிக்கையைச் சரியாகச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | வட்டி பெறுவனவுகளை சரியாகச் திருத்தம் செய்து கணக்குகளைச் சரியாகச் செய்தல் வேண்டும். |

### 1.3.2 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 கமநலசேவை குழுகளில் விபரமான குறிப்புகள், மதிப்பீட்டு அறிக்கைகள், மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ்கள், உறுதி ஆவணங்கள், கடன் ஆவணங்கள், நிலையான சொத்து ஆவணங்கள், உரிமைச் சான்றிதழ்கள், அட்டவணைகள் | விபரமான குறிப்புகள், மதிப்பீட்டு அறிக்கைகள், நிலுவை உறுதிப்படுத்தல் சான்றிதழ்கள், கடன் ஆவணங்கள் மற்றும் உரிமைச் சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலுவைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய சான்றுகளைச் |

| | | |
|---|---|---|
| மற்றும் கடனாளர் காலப் பகுப்பாய்வுகளைச் சமர்ப்பிக்காமையின் காரணமாக மொத்தமாக ரூபா 67,238,041 இனுடைய 51 சொத்துப் பொருட்களையும் மற்றும் மொத்தமாக ரூபா 12,439,631 இனுடைய 20 பொறுப்புப் பொருட்களையும் கணக்காய்வின்போது திருப்திகரமான விதத்தில் உறுதிப்படுத்த முடியவில்லை. | தெரிவிக்கப்பட்டது. | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்** | | | |
| | பிரிவு 53(4) | ஒவ்வொரு 03 வருடங்களுக்கு ஒரு முறையும் கமநலக் காணிப் பெயர் விபரப்பட்டியலை மீளாய்வு செய்ய வேண்டியபோதிலும், 12 சபைகள் அதற்கமைய நடவடிக்கை எடுக்கவில்லை. | கமநல அபிவிருத்திப் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| | நிதிப் பிரமாணம் 128(1), 315, 880 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் II ஆம் பகுதியின் 09 ஆம் பிரிவு | பணம் அல்லது இருப்புக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எல்லா உத்தியோகத்தர்களும் பிணை வைக்க வேண்டியபோதிலும், 17 கமநலசேவை குழுகளின் கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | கமநல அபிவிருத்திப் பணிப்பாளர் நாயகத்தின் 7/2/15/3/3(VII) ஆம் இலக்க 2023 ஜனவரி 23 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பிணை வைத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(இ)** | **கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயத்தின் சுற்றறிக்கை** | | | |
| (i) | 1994 மார்ச் 16 ஆம் திகதியிடப்பட்ட 392/94 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கை | வேறு நிறுவனங்கள் அல்லது நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் காலதாமதமின்றி அறவிடப்பட வேண்டியபோதிலும், 15 கமநலசேவை குழுகளில் பல வருடங்களாகப் பேணப்பட்டு வரும் ரூபா 64,867,736 நிலுவையொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்ட கால நிலுவைகள் சில அறவிடப்பட்டுள்ளதுடன், தீர்க்கப்படாத நிலுவைகள் அறவிடப்பட்டவுடன் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | காலத்திற்குக் காலம் கடன்களை அறவிடாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், சுற்றறிக்கை ஆலோசனையின்படி நடவடிக்கை எடுத்து நிலுவைகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 4/2012 கொண்ட சுற்றறிக்கையின் 5.6(i) ஆம் பந்தி | கமநல வங்கி கமநலச் சேவை சபையின் ஓர் அலகாக இருந்தமையினால் கமநல வங்கிக்குரிய எல்லா கணக்குகளும் கமநலச் சபையின் வருடாந்த இறுதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியபோதிலும், 18 கமநலசேவை குழுகளும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. | பிரதான அலுவலகத்திலிருந்து ஆலோசனை கிடைத்தவுடன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஆலோசனையின்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2018 ஏப்ரல் 20 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 06/2018 கொண்ட சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 01 படிவத்தின்படி தரிசு நெற்காணிகள் சம்பந்தமான தகவல்கள் தயாரிக்கப்பட்டுப் பேணப்பட வேண்டியதுடன், C குழுவின் தரிசு நெற்காணிகள் சம்பந்தமாக சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 02 மற்றும் பின்னிணைப்பு 03 படிவங்களைத் தயாரித்து மாவட்டப் பொறுப்பு கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளரிடம் 2018 மே 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டியபோதிலும், 2025 ஜனவரி 30 ஆம் திகதி வரையில் 06 வருடங்கள் | தற்போது உரிய படிவங்கள் சபைகளினால் தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஆலோசனையின்படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

கடந்துள்ளபோதிலும் 12 சபைகள் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி 2024 ஆண்டில் 18 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 24,013,111 இற்கான மிகையொன்றும், 18 கமநல வங்கிகளில் கூட்டுத்தொகை ரூபா 15,512,473 இற்கான மிகையும் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் 18 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 21,483,706 கூட்டுத்தொகையான தேறிய மிகையும் 18 கமநல வங்கியின் கூட்டுத்தொகை ரூபா 13,505,619 கூட்டுத்தொகையான மிகையொன்றும் காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

(அ) உரங்கள், விவசாய இரசாயனப் பொருட்கள், விதைகள் மற்றும் நாற்றுக்கள், விவசாய உபகரணங்கள் உட்பட விவசாய பொருட்களை விற்பனை செய்வது சம்பந்தமாக மீளாய்வாண்டின் 18 கமநலசேவை குழுகளினதும் மொத்த விற்பனை வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 193,624,569 ஆகவும், மொத்த மொத்த இலாபத்தின் கூட்டுத்தொகை ரூபா 10,783,920 ஆகவும் இருந்தது. அதற்கமைய 18 கமநலசேவை குழுகளினதும் மொத்த மொத்த இலாப வீதம் 5.6 சதவீதமாக காணப்பட்டது. அதற்குரியதாக கடந்த வருடத்தில் அது 8 சதவீதமாக இருந்தமையினால் மொத்த இலாப வீதத்தின் குறைவு 2.4 சதவீதம் ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ராஜகந்தளுவ கமநலச் சேவைச் சபையின் மொத்தம் ரூபா 196,684 நிலுவையுள்ள 02 சேமிப்புக் கணக்குகள் மற்றும் 06 சபைகளின் மொத்தம் ரூபா 385,241 நிலுவையுள்ள 07 நடப்புக் கணக்குகள் மீளாய்வாண்டின் இறுதியில் செயலற்றுக் காணப்பட்டதுடன், அந்தப் பணத்தை வினைத்திறனாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பாவனையிலில்லாத கணக்குகளை மூடி அந்த நிலுவைகளைச் சேமிப்புக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் ஹால்தண்டுவன சபையின் செயலற்றுக் காணப்படும் கணக்கை நிலையான வைப்புக் கணக்கொன்றுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. | நிதிகளை மிகவும் வினைத்திறனான முதலீட்டு வழியில் இடுதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையீனம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 கமநலசேவை குழுகளினால் கணினி மென்பொருள் வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்காக ரூபா 308,358 தொகை மற்றும் கமநல வங்கி உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி | இந்த வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவது கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தினால் செய்யப்படல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. | காலதாமதமின்றித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளிப்பதற்காக ரூபா 183,042 தொகையும் கடந்த வருடங்களில் கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தபோதிலும், அந்த திட்டம் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. | | |
| (ஆ) | முன்னேஸ்வரம் கமநலச் சேவைப் பிரிவுக்குரிய 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனையின்போது, கீரைச் செய்கைக்காக ஏக்கர் 102.75 உம், தென்னைச் செய்கைக்காக ஏக்கர் 22.75 உம் என நெற்காணிகள் ஏக்கர் 125.5 நெற்செய்கை தவிர்ந்த வேறு செய்கைகளுக்காகப் பாவிக்கப்பட்டிருந்ததுடன், ஏக்கர் 37.4 நெற்காணிகள் நிரப்பப்பட்டிருந்தன. எனினும், 2000 ஆம் ஆண்டின் இலக்கம் 46 கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 30(2), (3), 32(1) மற்றும் 33(1) உப பிரிவுகளின் பிரகாரம் ஆணையாளர் நாயகத்தின் எழுத்து மூல அனுமதி பெற்றிருக்கவில்லை. | கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் உரிய நபர்களை இனங்கண்டு சட்ட ரீதியாக அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | நெற்செய்கை செய்ய முடியாத நெற்காணிகளை வேறு பணிகளுக்காகப் பயன்படுத்துவது சம்பந்தமாகச் சட்டத்தின் பிரிவுகள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பதுடன், முறையான பரிசோதனையொன்றை நடத்தி இதற்கு இணங்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | முன்னேஸ்வரம் பிரிவிலுள்ள விவசாயி ஒருவருக்குச் சொந்தமான சுமார் 20 வருடங்களாகச் செய்கை பண்ணப்படாத ஏக்கர் 01, றூட் 03, பேர்ச்சஸ் 264 காணியை நெற்காணிகள் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்காகச் செய்யப்பட்ட கோரிக்கைகளுக்கமையப் பரிசோதனை செய்தபோது நெற்செய்கை செய்யக்கூடிய காணியொன்று என வெளிப்படுத்தப்பட்டமையினால் கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவின்படி மேற்பார்வைக் கட்டளைகள் வழங்கப்பட்டபோதிலும் அந்த மேற்பார்வைக் கட்டளைகளையும் புறக்கணித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், எனினும், 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 17/2018 கொண்ட சுற்றறிக்கை மற்றும் சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் அந்தக் காணிப் பகுதியைக் கையகப்படுத்திச் செய்கை | தற்போது மேற்பார்வைக் குழுக்களை அமைத்து வினைத்திறனற்ற காணிகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | நெற்செய்கை செய்யக்கூடிய நெற்காணிகளில் நெற்செய்கை செய்யாமை சம்பந்தமாகச் சுற்றறிக்கை மற்றும் சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பண்ணுவதற்கு கமநல அபிவிருத்திச் சபை மற்றும் மாவட்ட அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | 160 ஏக்கர் பரப்பளவில் காணப்பட்ட கோட்டபிட்டிய குளத்தின் காணிப் பிரதேசம் அநாவசியமான கட்டுமானங்கள் காரணமாக சுமார் ஏக்கர் 25 இனால் குறைந்துள்ளதுடன், அந்தக் காணியில் இடம்பெறும் அநாவசியமான நடவடிக்கைகள் காரணமாகக் குளத்திற்கு பல்வேறு சேதங்கள் ஏற்பட்டிருந்தன. அவ்வாறு இருந்தபோதிலும், 2000 ஆம் ஆண்டின் இலக்கம் 46 கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 96 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த நபர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அத்துமீறிய நபர்களை அகற்றுவதில் சிக்கலான மற்றும் பிரச்சினையான நிலைமைகள் அவதானிக்கப்படுவதனால் இந்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் இணக்கத்துடன் ஒருங்கிணைந்த பரிசோதனையொன்றை நடத்தித் தீர்மானம் எடுப்பது பொருத்தமானது என அறிவிக்கப்பட்டிருப்பதனால் அதற்கமைய எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. | அத்துமீறிய கைபற்றல்கள் சம்பந்தமாகச் சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2 KR – 2006, 2008, 2010 செயற்திட்டத்தின் கீழ் ரூபா 250,000 வீதம் 93 கை உழவு இயந்திரங்களும் மற்றும் ரூபா 200,000 வீதம் 25 கை உழவு இயந்திரங்களும் என 118 கை உழவு இயந்திரங்கள் 118 விவசாயிகளுக்குக் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 41 விவசாயிகளிடமிருந்து ரூபா 5,494,420 ஆன தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் திருத்தம் செய்வதற்கான உதிரிப் பாகங்கள் சந்தையில் இல்லாதமையினால் பெரும்பாலான உழவு இயந்திரங்கள் தற்போது செயலற்றுப் போயிருந்தன. | உழவு இயந்திரங்களின் தவணைப் பணத்தை அறவிடுவதற்கு எதிர்வரும் 03 மாதங்களுக்குள் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படும் என்றும் உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்வது சம்பந்தமாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. | காலத்திற்குக் காலம் தவணைப் பணத்தை அறவிடாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், நிலுவைகளை அறவிடுவதற்கும், திருத்தம் செய்வதற்கான உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்து வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 தொழிற்பாட்டு திறமையீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நோக்கு மற்றும் செயற்பணி கமநல நிலங்களின் நிலையான அபிவிருத்தி மற்றும் அனைத்து விவசாய காணிகளினதும் உச்சபட்ச உற்பத்தித்திறனை இலக்காகக் கொண்டிருந்தாலும், புத்தளம் | கமநலத் திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று, விளைச்சலை அதிகரிப்பதற்காக விவசாயிகளுக்குத் தேவையான வசதிகள், அறிவு ஆகியவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உற்பத்தித்திறன் வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்டத்தின் 303 கிராம சேவகர் பிரிவுகளில், 2023 சிறு போகம், 2023/2024 பெரும் போகம் மற்றும் 2024 சிறு போகத்தில் அறுவடை விளைச்சலை கருத்தில் கொள்ளும்போது சாதாரணமற்ற உற்பத்தித்திறன் வேறுபாடுகள் காணப்பட்டன. எனினும், அந்தந்த கமநல நிலங்களின் உற்பத்தித்திறன் வேறுபாடுகளுக்கான கட்டுப்படுத்தக்கூடிய / கட்டுப்படுத்த முடியாத காரணங்களை பகுப்பாய்வு செய்து தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | | |
| (ஆ) | 18 கமநலசேவை குழுகளுக்குச் சொந்தமான 340 கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள ஏக்கர் 59,468 நிலப்பரப்பில், 2023 சிறு போகம், 2023/24 பெரும் போகம் மற்றும் 2024 சிறு போகம் பருவங்களில் முறையே ஏக்கர் 13,238, 14,755 மற்றும் 17,886 நிலங்கள் பயிரிடப்படாமல் இருந்தமை அடிப்படையில் மூன்று போகங்களிலும் (01 ஏக்கருக்கு சராசரி விளைச்சல் 80 நெல் புசல்) மொத்தமாக 3.67 மில்லியன் நெல் புசல்கள் அளவுக்கான விளைச்சல் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இழக்கப்பட்டது. | சம்பந்தப்பட்ட பருவங்களுக்குரிய பயிர்ச்செய்கை இலக்குகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பிடப்பட்ட ஏக்கர் அளவை விட அதிகமான பரப்பில் பயிரிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பயிர்ச்சேதங்கள் காரணமாக இலக்குகளை அடைய முடியவில்லை என்றும், இயற்கை அனர்த்தங்கள் தவிர மற்ற அனர்த்தங்களைத் தடுக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். | பயிரிடப்படாத அனைத்து நிலங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ள உத்திகள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2024/25 பெரும் போகத்தில், 15 கமநல அபிவிருத்திச் சபைகளுக்குச் சொந்தமான ஏக்கர் 43,106 பயிரிடப்பட்ட நிலங்களில், ஏக்கர் 42,909 நிலங்களில் சாதாரண சேற்று நெல் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. பாராசூட் முறையையோ அல்லது நாற்று நடும் இயந்திரத்தையோ பயன்படுத்தாததாலும், விவசாயிகளிடையே பிரபலப்படுத்த நடவடிக்கை எடுக்காததாலும், ஏக்கர் 42,909 இலிருந்து பெறக்கூடிய மேலதிக விளைச்சலான 36 புசல்கள் வீதம் | விவசாயிகளால் இந்த பயிர்ச்செய்கை முறைகளை அனைத்து நெற்காணிகளிலும் மேற்கொள்ள முடியாது என்றும், செய்யக்கூடிய நெற்காணிகளுக்கு விவசாயிகள் செல்லத் தொடங்கியுள்ளார்கள் என்றும் தெரிவித்தார். | விளைச்சலை அதிகரிப்பதற்காக பாராசூட் முறை அல்லது நாற்று நடும் இயந்திரத்தை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தம் மேலதிக அறுவடை 1,544,724 புசல்கள் வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இழக்கப்பட்டது. | | |
| (ஈ) | புத்தளம் மாவட்டத்தில் உள்ள 18 கமநலசேவை குழுகளில் 2024 சிறு போகத்தில் பயிர்ச்செய்கை பணிகள் மார்ச் மாதம் தொடங்கப்பட்டிருந்தாலும், போகத்திற்குரிய உரம் மானியப் பணம் ரூபா 222 மில்லியன் 22,357 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் 2024 மே 20 ஆம் திகதி முதல் கணக்கு வைக்கப்பட்டது. 2024/2025 பெரும் போகம் பருவத்தில் பயிர்ச்செய்கை பணிகள் 2024 செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்டிருந்தாலும், போகத்திற்குரிய மானியப் பணம் ரூபா 433 மில்லியன் 28,955 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு 2024 ஒக்தோபர் 28 ஆம் திகதி முதல் கணக்கு வைக்கப்பட்டது. வயல்களுக்கு தேவையான யூரியா மற்றும் MOP உரம் ஆகியவற்றுக்கு விவசாய பணிப்பாளர் நாயகத்தின் 2022 செப்தம்பர் 11 ஆந் திகதிய PG/12/1/19/Fert ஆம் உரி பரிந்துரைக்கு இணங்க யூரியா உரமானது நெற்செய்கை செய்த 02, 04, 06 மற்றும் 07 வார காலப்பகுதியிலும் MOP உரம் 04 மற்றும் 06 வார காலப்பகுதியிலும் இடப்பட வேண்டும். எனினும், உரம் மானியப் பணம் தாமதமாக வழங்கப்பட்டதால், மானிய உரம் குறித்த நேரத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | விவசாயிகளுக்கு உரத்திற்கான பணம் டிஜிட்டல் முறை மூலம் வழங்கப்படுவதாகவும், குறிப்பிட்ட நாளில் மானியப் பணம் வழங்குவதற்காகத் தரவுகள் agrarian.lk இணையதளத்தில் உள்ளீடு செய்யப்படுவதாகவும் தெரிவித்தார். நெல் வயல்கள் நீரில் மூழ்குதல், நிலத்தின் இருப்பிடத்திற்கு ஏற்ப நீர் பெறுதல் மற்றும் வடியச் செய்வதில் உள்ள சிரமங்கள் போன்ற காரணங்களால் தாமதமாக பயிர்ச்செய்கை செய்யும் விவசாயிகளின் தரவுகள் தாமதமாகவே தகவல் கட்டமைப்பில் உள்ளீடு செய்யப்படுவதால், அவர்களுக்குப் பணம் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. | எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடையக்கூடிய வகையில் உரம் மானியத் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும். |
| (உ) | புத்தளம் மாவட்டத்தில் உள்ள 16 கமநலசேவை குழுகளில் 1,049 குளங்கள், 198 அணைக்கட்டுகள், 247 வாய்க்கால்கள், 573 கமநலப் பாதைகள் மற்றும் 838 கிணறுகள் உள்ளன. 2024 ஆம் ஆண்டில் அவற்றுள் 221 குளங்கள், 54 அணைக்கட்டுகள், 144 கமநலப் | புனரமைக்கப்பட வேண்டிய நீர்ப்பாசனத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டாலும், ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் புனரமைப்புப் பணிகள் மட்டுப்படுத்தப்படுத்தப்படுகின்றமை. | உரிய நடவடிக்கை எடுத்து, தேவையான நிதி ஒதுக்கீட்டைப் பெற்று, மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகளை தாமதமின்றி நிறைவேற்ற வேண்டும். |

பாதைகள், 70 வாய்க்கால்கள், 20 கிணறுகள் புனரமைப்பதற்கான அபிவிருத்தி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், 34 குளங்கள், 09 அணைக்கட்டுகள், 02 வாய்க்கால்கள் மற்றும் 08 கமநலப் பாதைகள் ஆகியவற்றின் புனரமைப்பு பணிகள் மட்டுமே நிறைவடைந்திருந்தன.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு உரித்து ஒப்படைக்கப்பட்டுள்ள பாலக்குடாவ கமநலசேவை குழுக் காணியில் 12x14 அடி அளவில் ஒரு இலத்திரனிய தரவுத் தொடர்பாடல் கம்பனியின் பரப்புகை விநியோகக் கருவிகள் நிறுவப்பட்டிருந்தன. எனினும், இதற்காக எந்தவித கட்டணமும் கமநலசேவை குழுக்குப் பெறப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டபோதே இந்தப் பரப்புகை கோபுரம் அந்தக் காணியில் அமைந்திருந்தமையால் அதற்காகக் கட்டணம் அறவிடுவது கடினம் என்று தெரிவிக்கப்பட்டது. | கமநல அபிவிருத்தி திணைக்களத்துடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களை அறிவுறுத்தி முறையாக சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வனத்தவில்லு கமநலச் சேவைப் பிரிவுக்குரிய 635/1 அலுத் எளுவங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள ஏக்கர் 39.59 கொண்ட தரிசு நெற்காணிப் பகுதி, கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் (சிலாபம்) க/அ/மா/அ/பு/சட்ட/02/01/17 ஆம் இலக்க 2020 பெப்ரவரி 29 திகதியிடப்பட்ட கடிதத்தின்படி நெற்செய்கை செய்யக்கூடியது என நிச்சயமாக உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 02 திகதியிடப்பட்ட DAD/CG/01/01 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய, அவரது தனிப்பட்ட அவதானிப்பின் அடிப்படையில் நெற்செய்கை செய்ய முடியாது என்று தெரிவித்து வனப் பயிர்ச்செய்கைக்காக வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2020 திசெம்பர் 02 திகதியிட்ட DAD/CG/01/01 ஆம் இலக்க கடிதத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொழில்நுட்பப் பரிசோதனை மற்றும் காணியின் பயிர்ச்செய்கை வரலாற்றை ஆய்வு செய்து நெற்செய்கைக்கு பொருத்தமானதா இல்லையா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேலும், இது சம்பந்தமாக முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்பப் பரிசோதனை அல்லது காணியின் பயிர்ச்செய்கை வரலாற்றை ஆய்வு செய்யாமலும், கமநல அமைப்புகள் மற்றும் ஏனைய நெருங்கிய தொடர்புடைய தரப்பினரிடமிருந்து எழுத்துமூல உறுதிப்படுத்தல்களைப் பெறாமலும், வெளிப்படைத்தன்மையின்றி இந்தக் காணி தனியார் நிறுவனமொன்றுக்கு வனப் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்டிருந்தது. | | |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 கமநலசேவை குழுகளிலும் உள்ள மண் பரிசோதனை உபகரணங்கள், பாலக்குடாவ சபையிலுள்ள கைவிரல் அடையாள இயந்திரம், 03 சபைகளிலுள்ள 03 உழவு இயந்திரங்கள், ராஜகந்தளுவ சபையிலுள்ள நீர் தாங்கி மற்றும் உணவு விடுதியிலுள்ள 04 விற்பனை நிலையங்கள், மதுரங்குளி மற்றும் புத்த/தப்போவ சபைகளிலுள்ள 02 அரச விடுதிகள், வனத்தவில்லு சபையிலுள்ள விதைப் பண்டகசாலை, இரு சபைகளிலுள்ள 05 பண்டகசாலைகள், ஹால்தண்டுவன சபையிலுள்ள நெல் அறுவடை இயந்திரம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனத் திட்ட உபகரணங்கள் செயலற்றுக் காணப்பட்டன. | சம்பந்தப்பட்ட சொத்துக்களை எதிர்காலத்தில் வினைத்திறனாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. | முறையான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தி சொத்துக்களை வினைத்திறனாகப் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டில் வோர்ல்ட் விஷன் நிறுவனத்தின் தலையீட்டுடன் வனாத்தவில்லு கமநலச் சேவைச் சபையில் அமைக்கப்பட்ட திசு வளர்ப்பு ஆய்வுகூடம் வினைத்திறன் அற்ற முறையில் பேணப்பட்டு வருகிறது. 2012 ஆம் ஆண்டு முதல் தற்போது வரையில் அதன் வருமானத்தை செலவுடன் ஒப்பிடும்போது, ரூபா 1,146,209 தொகையான திரண்ட நிதியியல் பெறுபேற்றின் வீழ்ச்சியொன்று காணப்பட்டது. | சம்பந்தப்பட்ட கட்டிடம் மற்றும் அதன் உபகரணங்களை குத்தகை அடிப்படையில் வாடிக்கையாளருக்கு வழங்குவதற்குச் சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | -மேற்படி- |

## 4. கமநல வங்கிகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல வங்கி நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை ஒரு முன்னோடித் திட்டமாகவே இருந்து வருகிறது. அதற்குப் பதிலாக தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியாக ஒழுங்குபடுத்தப்படுவதற்கான கட்டுப்பாட்டுக் கோரிக்கைகள் கமநலச் சேவை நிலையங்களால் மாவட்ட கமநல அபிவிருத்தி அலுவலகத்திற்கு அனுப்பப்படவில்லை. | இது குறித்து தேசிய நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகமே எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட வங்கியாக ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான கோரிக்கைகளைச் செய்ய வேண்டும். |
| (ஆ) | 2020 ஒக்தோபர் 08 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 9/2020 கமநலச் சேவை ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 2.6.1 ஆம் பந்தியின்படி, ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட கமநல அமைப்பும், தனது சேமிப்புக் கணக்கை கமநலச் சேவைப் பிரிவிலுள்ள கமநல வங்கி (முன்னோடி) திட்டத்தில் திறந்து பேணுவதுடன், அனைத்துப் பரிமாற்றங்களையும் அந்த சேமிப்புக் கணக்கு மூலம் மேற்கொள்ள வேண்டும். எனினும், 18 சபைகளில் பதிவுசெய்யப்பட்ட 662 கமநல அமைப்புகளில், 512 கமநல அமைப்புகள் வேறு வங்கிகளில் ரூபா 87,189,977 பணம் வைப்பு செய்யப்பட்டிருந்தது. | ஒவ்வொரு மாதமும் முன்னேற்றத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஆலோசனையின்படி நடவடிக்கை எடுத்து, கமநல அமைப்புகளின் வங்கிக் கணக்குகள் கமநலச் சேவைச் சபையின் வங்கியில் பேணப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (இ) | 18 கமநலசேவை குழுகளிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 1515 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாயக் கடன்கள், செயற்திட்டக் கடன்கள், தொழில்முயற்சி கடன்கள் மற்றும் ஏனைய கடன்கள் ஆகியவற்றின் மொத்தத் தொகையான ரூபா 67,944,787 இல், 882 விவசாயிகளின் ரூபா 29,222,898 நிலுவைக் கடன் தொகை 01 வருடம் முதல் 20 வருடங்களுக்கும் மேலாக காலதாமதமாகியிருந்தும் அறவிடப்படவில்லை. | ஒவ்வொரு மாதமும் முன்னேற்றத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | நிலுவைக் கடன்களுக்குரிய கடன் வழங்கல் மற்றும் குறித்த காலத்தில் அறவிடாமை சம்பந்தமாக பரிசோதனையொன்றை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் நிலுவைக் கடன்களை அறவிடவும் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | புத்தளம் மாவட்டத்தின் 18 கமநலச் சேவை நிலையங்களுக்குரிய 370 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள 68,468 விவசாயிகளில், 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் விவசாயக் கடன், செயற்திட்டக் கடன், தொழில்முயற்சி கடன் மற்றும் ஏனைய கடன்களைப் பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை முறையே 4,111, 1,373, 806 மற்றும் 333 ஆக இருந்தது. இது மொத்த விவசாயிகளில் முறையே 6 சதவீதம், 2 சதவீதம், 1.2 சதவீதம் மற்றும் 0.5 சதவீதம் என்ற மிகக் குறைந்த பெறுமதியாக இருந்தது. | ஒவ்வொரு மாதமும் முன்னேற்றத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. | கமநல வங்கிகளை நிறுவியதன் நோக்கத்தின் பிரகாரம் கடன் வழங்குதலின் முன்னேற்றத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |